# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2015

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 4

சுட்டெண்:

நேரம்: 120 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## 1) பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. உயிர் எழுத்துகள் ______________________ .

(12, 18, 30)

2. இடுக்கண் என்ற சொல்லின் பொருள் ______________________ .

(இன்பம், துன்பம், மகிழ்ச்சி)

3. கிளிநொச்சி மாவட்டத்தில் நெற்செய்கைக்குத் தேவையான

நீர் ______________________ இருந்து பெறப்படுகிறது.

(வவுனிக்குளத்தில், மாங்குளத்தில், இரணைமடுக்குளத்தில்)

4. நீதி நெறி விளக்கம் என்ற நூலை எழுதியவர்

______________________ .

(ஈ.வே.இராமசாமி, சீ.வை.தாமோதரம்பிள்ளை, உ.வே.சாமிநாதஐயர்)

5. குறள்:- **முறை செய்து ______________________ மன்னவன் மக்கட்கு**

**இறையென்று வைக்கப் படும்**

(போற்றும், காப்பாற்றும், ஏற்றும்)

6. தரையில் வாழும் உயிரினங்களுக்குத் தேவையான நீர் ______________ .

(நன்னீர், உவர்நீர், கடல்நீர்)

7. நீரிலும் நிலத்திலும் வாழக்கூடிய உயிரினம் ______________________ .

(திமிங்கிலம், ஆமை, சுறா)

8. வேப்பங்குச்சி பல் ஈறுகளுக்கு ______________________ தரும்.

(எளிமை, இனிமை, வலிமை)

9. **பழமொழி :- அன்னம் இட்ட ______________ கன்னம் இடாதே!**

(காட்டில், வீட்டில், நாட்டில்)

10. கோடைநாளில் குடையைப் போன்று நிழலைத் தருவது

______________________ .

(ஆலமரம், பலாமரம், மாமரம்)

11. இடர்வரும் வேளையில் உதவாத நண்பனை ______________ !

(நம்பு, விரும்பு, நம்பாதே)

12. இராவணனது ஆட்சிக்காலத்தில் தமிழகத்தின் தலைநகர்

______________________ .

(இந்தியா, இலங்கை, மலேசியா)

13. தொன்மையும் சிறப்பும் உடைய முழவு ______________________ .

(தண்ணுமை, மேளம், பறை)

14. **நொடி :- பூக்கும் காய்க்கும் கலகலக்கும் காகம் இருக்கக்**

**கொப்பில்லை அது** ________________ .

(நெல், பலா, மா)

15. கன்னியாய் வெந்நீர் ஊற்றுகள் ______________________ உள்ளன.

(திருமலையில், யாழ்ப்பாணத்தில், வன்னியில்)

16. விருந்தினரை ______________________ கூறி வரவேற்று மகிழ்வர்.

(கடுஞ்சொல், இன்சொல், வன்சொல்)

17. வாழைக்கன்று ______________________ எனச் செழித்து

வளர்ந்திருக்கின்றது.

(குறுகுறு, தடதட, மதமத)

18. ______________________ உயர்ந்தோரை அனைவரும் மதிப்பர்.

(உயர்வு தாழ்வுகளில், கல்விகேள்விகளில், இன்பதுன்பங்களில்)

19. திருகோணமலை ______________________ தாய்நிலம்.

(தமிழரின், சிங்களவரின், பறங்கியரின்)

20. வீணைக்கொடியோன் எனப் போற்றப்பட்ட மன்னன்

______________________ .

(சங்கிலியன், பண்டாரவன்னியன், இராவணன்)

21. கண்ணகிக்குச் சிலை வடித்தவன் ______________________ .

(கனகன், சேரன்செங்குட்டுவன், விசயன்)

22. "**நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால்.....** எனத் தொடங்கும் பாடல் இடம்

பெற்றுள்ள நூல் ______________________ .

(மூதுரை, நல்வழி, ஆத்திசூடி)

23. கமழ்வுச் சரக்குகளில் ஒன்று ______________________ .

(ஏலம், மல்லி, ஓமம்)

24. எல்லாளனுக்குத் திறை செலுத்திய கல்யாணிச் சிற்றரசின் மன்னன்

_________________________.

(களனிதீசன், தேவநம்பியதீசன், காகவனத்தீசன்)

25. நான் படித்துக் கொண்டிருக்கின்றேன் எனக்கு

_________________________ விளையாட நேரம் இல்லை.

(எப்பொழுது, இப்பொழுது, அப்பொழுது)

26. நாங்கள் நாளை விலங்ககத்திற்குச் _________________________

(செல்கின்றோம், செல்வோம், சென்றோம்)

27. மகாவலி ஆறு _________________________ க் கடலில் வந்து கலக்கிறது.

(மட்டக்களப்பு, திருமலை, ஆனையிறவு)

28. இளந்திரையன் _________________________ கடமைகளைத் தவறாது செய்வான்.

(தனது, உனது, எனது)

29. பால் + பொங்கல் என்பதைச் சேர்த்து எழுதினால்

(பால்ப்பொங்கல், பாற்பொங்கல், பால்பொங்கல் )

30. புலவர் _________________________ ப் புகழ்ந்து பாடிப் பரிசு பெற்றார்.

(மன்னன், மன்னனை, மன்னனுக்கு)

| புள்ளிகள் 30 |
|---|

**2) கீழே தரப்பட்டுள்ள சொல்லியங்களில் கீறிட்ட இடத்தை மிகப் பொருத்தமான சொல்லால் நிரப்புக.**

| | | |
|---|---|---|
| படிப்படியாக | உள்ளும்புறமும் | ஓடஓட |
| திரள்திரளாக | கடகட | |

1. நாங்கள் ________________ நல்லவர்களாக வாழவேண்டும்.

2. மாட்டுவண்டி கற்பாதையில்________________ எனச் செல்கிறது.

3. கலைவிழாவுக்கு மக்கள்________________ச் சென்றனர்.

4. பொருட்களின் விலை ________________ ஏறியது.

5. புலி மானை ________________த் துரத்தியது.

புள்ளிகள் 05

## 3) மாறி இருக்கும் சொற்களை ஒழுங்குபடுத்தி; கருத்துள்ள சொல்லியமாக்குக.

1. பெரிதும் / தமிழர் / விரும்புவர் / விருந்தோம்பலைப்

_______________________________________________

_______________________________________________ .

2. மருந்துப் / உடையது / பண்புகளை / வேம்பு

_______________________________________________

_______________________________________________ .

3. பயன்களைத் / பல / தருகிறது / ஆலமரம்

_______________________________________________

_______________________________________________ .

4. கற்போம் / தேடிக் / நூல்களைத் / நல்ல

_______________________________________________

_______________________________________________ .

5. பாட்டுப் / தமிழினி / பாடுவாள் / இனிமையாகப்

_______________________________________________

_______________________________________________ .

| புள்ளிகள் 05 |
| --- |

## 4) கீறிட்ட இடங்களில் பொருத்தமான முடிக்கும் சொற்களை எழுதி; சொல்லியங்களை நிறைவு செய்க.

1. உலகில் பல இனங்களைச் சேர்ந்த மக்கள் ____________________ .

2. பழமொழி : இனிய நண்பனை இடுக்கணில் ____________________ .

3. கார்த்திகை மாதத்தில் மாவீரர் நாளைக் ____________________ .

4. நாம் என்றும் ஒற்றுமையாக வாழ ____________________ .

5. எங்கள் தாயகத்தை நாம் மறக்கக் ____________________ .

புள்ளிகள் 10

**5) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடங்களில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| குறிஞ்சி | ஓலை | பலா |
| காயும் | தென்னை | |

இயற்கையின் கொடையில் நிலைத்திணைகள் (தாவரங்கள்) முதன்மையானவை. மா, ______________ , வாழை போன்றவை இனிய கனிகள் தருவனவாகும். நெல்லிக்கனி மருந்துக் குணம் உள்ள கனியாகும். முருங்கை மரத்தின் ______________ இலையும் உணவுக்குப் பயன்படுகின்றன. பனை, ______________ போன்றன முழுமையாகப் பயன்படும் நிலைத்திணைகள். அவற்றின் ______________ , மட்டை, மரம் போன்றன எல்லாம் பயன் தருவன. தூதுவளை, ______________, முசுட்டை ஆகிய செடிகொடிகளின் இலைகள் சத்துணவாகப் பயன்படுகின்றன.

புள்ளிகள் 10

## 6) கீழேயுள்ள பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஒவ்வொரு நாட்டிற்கும் தேசியக்கொடி உண்டு. தமிழீழத்தின் தேசியக்கொடி புலிக்கொடியாகும். இக்கொடியில் மஞ்சள், சிவப்பு, கறுப்பு, வெள்ளை ஆகிய நிறங்கள் உள்ளன. இதில் புலி பொறிக்கப்பட்டிருக்கும். தேசியக்கொடியை வணங்குவது தாய்நாட்டை வணங்குவதற்கு ஒப்பாகும். தேசியக் கொடி ஏற்றும்போது நாம் எழுந்து நின்று வணக்கம் செலுத்துதல் வேண்டும். கொடி ஏற்றும் போது கொடிவணக்கப் பாடல் பாடப்படும்.

1. தமிழீழத்தின் தேசியக்கொடி எது?

______________________________

______________________________

2. தேசியக்கொடியில் எது பொறிக்கப்பட்டிருக்கும்?

______________________________

______________________________

3. எதை வணங்குவது தாய்நாட்டை வணங்குவதற்கு ஒப்பாகும்?

______________________________

______________________________

4. நாம் எப்போது எழுந்து நின்று வணக்கம் செலுத்துதல் வேண்டும்?

______________________________

______________________________

5. கொடி ஏற்றும் போது என்ன பாடல் பாடப்படும்?

______________________________

______________________________

| புள்ளிகள் 10 |
|---|

## 7) பாடநூல் வினாக்களுக்கு விடை தருக.

1. தமிழ் நெடுங்கணக்கில் உள்ள எழுத்துகள் எத்தனை?

_______________________________________________

_______________________________________________

2. ஆடிப்பிறப்பின் சிறப்பான நிகழ்வு எது?

_______________________________________________

_______________________________________________

3. ஓட்டுயிரிகள் இரண்டின் பெயர்களைத் தருக.

_______________________________________________

_______________________________________________

4. கோலாட்டம் இன்று என்ன கலையாக மாறியுள்ளது?

_______________________________________________

_______________________________________________

5. மன்னனாய் இருந்தும் ஈசன் எனப் போற்றப்பட்டவன் யார்?

_______________________________________________

_______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

## 8) கீழே தரப்பட்டுள்ள சொற்களை உங்கள் வாழிட மொழியில் எழுதுக.

1. நட்பு - ______________________

2. பறவை - ______________________

3. கடற்கரை - ______________________

4. தொலைபேசி - ______________________

5. மிதியுந்து - ______________________

புள்ளிகள் 05

9) தரப்பட்டுள்ள படத்தை வைத்து, 30 சொற்களுக்குக் குறையாமல் கதை எழுதுக.



புள்ளிகள் 15